பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4
13 06 2025 7 15
வெள்ளிக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. அகமதாபாத் விமான விபத்தில் ஏற்பட்ட உயிரிழப்புகளுக்கு உலக தலைவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

2. விமான விபத்தில் உயிரிழந்தவர்கள் குடும்பத்தினருக்கு அனைத்து உதவிகளையும் மத்திய அரசு வழங்கும் என்று உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

3. சமூக பொருளாதார மாற்றங்களை ஏற்படுத்துவதில் குடிமைப் பணி அதிகாரிகள் முக்கிய பங்கு வகிப்பதாக மக்களவைத் தலைவர் திரு. ஓம் பிர்லா தெரிவித்துள்ளார்.

4. காங்கோவில் ஏற்பட்ட படகு விபத்தில் 32 பேர் உயிரிழந்தனர்.

5. சீனாவில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் சசிகுமார் முகுந்த் காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

<u>*--- இனி விரிவான செய்திகள் ---*</u>

<<<<>>>>

அகமதாபாத் விமான விபத்தில் ஏற்பட்ட உயிரிழப்புகளுக்கு உலக தலைவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்க அதிபர் திரு. டொனால்ட் ட்ரம்ப், இந்த விபத்து மிகவும் கவலையளிப்பதாக தெரிவித்துள்ளார்.

தேவைப்பட்டால் இதில் உதவ அமெரிக்கா தயாராக உள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

இந்த விபத்து குறித்து ரஷ்ய அதிபர் திரு. விளாடிமிர் புடின், யுன்ரைன் அதிபர் திரு. ஜெலன்ஸ்கி, மலேசிய பிரதமர் திரு. இப்ராஹிம், இலங்கை அதிபர் திரு. அநுர குமார திசநாயக, மாலத்தீவு அதிபர் திரு. முகமது மொயிஸ், சிங்கப்பூர் பிரதமர் திரு. லாரன் ஸ்வாங், ஆஸ்திரேலிய பிரதமர் திரு. ஆந்தனி அல்பனீஸ், ஃபிரான்ஸ் அதிபர் திரு. இம்மானுவேல் மாக்ரோன் உள்ளிட்டோரும் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

ஐரோப்பிய யூனியன் தலைவர் திருமதி **Ursula Wonder Lein,** ஐ.நா. பொதுச் செயலாளர் திரு. அன்டனியோ குட்ரெஸ் ஆகியோரும் விபத்தில் ஏற்பட்ட உயிரிழப்புகளுக்கு இரங்கல் தெரிவித்துள்ளனர்.

பிரிட்டன் பிரதமர் திரு. **Kier Starmer** வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் உயிரிழந்தோர் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்வதாக கூறியுள்ளார்.

<<<<>>>>

அகமதாபாத் விமான விபத்தில் விமானத்தில் பயணம் செய்த 241 பேர் உயிரிழந்துள்ளதாக ஏர் இந்தியா நிறுவனம் கூறியுள்ளது.

விமானத்தில் 242 பேர் பயணம் செய்த நிலையில் ஒருவர் மட்டும் உயிர்தப்பியுள்ளதாக அந்நிறுவனம் சமூக வலைதளத்தில் தெரிவித்துள்ளது.

உயிர் தப்பியவர் லேசான காயங்களுடன் சிகிச்சைக்காக மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இந்த விமான விபத்தில் குஜராத் முன்னாள் முதலமைச்சர் விஜய் ரூபானி உயிரிழந்திருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

உயிரிழந்தோரின் குடும்பத்தினருக்கு ஒரு கோடி ரூபாய் வழங்கப்படும் என்று ஏர் இந்தியா அறிவித்துள்ளது.

விமான விபத்தில் உயிரிழந்தவர்களின் உறவினர்கள் வசதிக்காக தில்லி மற்றும் மும்பையில் இருந்து இரண்டு சிறப்பு விமானங்கள் இயக்கப்படுவதாக அந்நிறுவனம் கூறியுள்ளது.

விபத்து தொடர்பான விசாரணைக்கு முழு ஒத்துழைப்பு வழங்கப்படும் என்றும் ஏர் இந்தியா கூறியுள்ளது.

<<<<>>>>

விமான விபத்தில் உயிரிழந்தவர்கள் குடும்பத்தினருக்கு அனைத்து உதவிகளையும் மத்திய அரசு வழங்கும் என்று உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

விபத்து நடந்த இடத்தை சிவில் விமானப் போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. ராம்மோகன் நாயுடு, குஜராத் முதலமைச்சர் திரு. பூபேந்திர பட்டேல் உள்ளிட்டோருடன் பார்வையிட்ட பின் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

விபத்துக்குள்ளான விமானத்தில் ஒரு லட்சத்து 25 ஆயிரம் லிட்டர் எரிபொருள் இருந்ததாக கூறினார்.

விபத்தில் சிக்கியவுடன் விமானத்தில் ஏற்பட்ட தீயால் உயிரிழப்புகள் ஏற்பட்டதாக அவர் தெரிவித்தார்.

இறந்தவர்களின் உடல்களில் இருந்து டி.என்.ஏ. மாதிரிகள் சேகரிக்கப்பட்டுள்ளதாகவும், உறவினர்களிடமிருந்து பெறப்பட்ட மாதிரிகள் பரிசோதிக்கப்பட்டு உடல்கள் அடையாளம் காணப்படும் என்றும் தி. அமித் ஷா கூறினார்.

இந்த விமான விபத்து குறித்து முதற்கட்ட விசாரணை தொடங்கியுள்ளதாக சிவில் விமானப் போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு ராம் மோகன் நாயுடு தெரிவித்துள்ளார்.

இந்த விமான விபத்து குறித்து முழுமையாக ஆய்வு மேற்கொள்ள பல்துறை நிபுணர்களைக் கொண்ட உயர்நிலைக் குழுவை மத்திய அரசு அமைக்கும் என்று தெரிவித்தார்.

விமான போக்குவரத்தில் பாதுகாப்பை அதிகரிப்பது குறித்தும், எதிர்காலத்தில் இதுபோன்ற விபத்துகள் நிகழாமல் தடுப்பது குறித்தும் அந்த குழு ஆய்வு செய்து ஆலோசனைகள் வழங்கும் என்று அவர் கூறினார்.

<<<<>>>>

இளையோருக்கு உத்வேகம் அளிக்கும் சக்தியாக தேசிய மாணவர் படை திகழ்வதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

நேற்று புதுதில்லியில் எவரெஸ்ட் சிகரத்தை தொட்ட தேசிய மாணவர் படையினருடன் கலந்துரையாடுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

எந்தவொரு இலக்கையும் எட்ட முடியும் என்பதற்கு தேசிய மாணவர் படையின் இந்த சாதனை உதாரணமாக உள்ளது என்று அவர் கூறினார்.

எதிர்கால சவால்களை துணிச்சலுடன் எதிர்கொள்வதற்கும் இது அனுபவமாக இருக்கும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

<<<<>>>>

நாடு முழுவதும் மேற்கொள்ளப்பட்ட வேளாண் வளர்ச்சிக்கான பிரச்சார இயக்கம் நேற்றுடன் நிறைவடைந்தது.

இந்த இயக்கத்தில் ஒரு லட்சம் கிராமங்களில் பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இந்த இயக்கத்தின் மூலம் ஒரு கோடியே 12 லட்சம் விவசாயிகளுடன் நேரடியாக கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டதாக வேளாண் அமைச்சகம் கூறியுள்ளது.

இந்த ஆண்டு ஏழரை லட்சம் ஹெக்டேரில் இயற்கை விவசாயம் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளதாகவும் மத்திய அரசு தெரிவித்துள்ளது.

<<<<>>>>

சமூக பொருளாதார மாற்றங்களை ஏற்படுத்துவதில் குடிமைப் பணி அதிகாரிகள் முக்கிய பங்கு வகிப்பதாக மக்களவைத் தலைவர் திரு. ஓம் பிர்லா தெரிவித்துள்ளார்.

முசோரியில் குடிமைப்பணி அதிகாரிகளுக்கான பயிற்சி அகாடமியில் அதிகாரிகளிடையே உரையாற்றிய அவர், புதிய தொழில்நுட்பங்களை உடனுக்குடன் ஏற்று அதிகாரிகள் செயல்பட வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

மக்கள் நலனையும், சமூக மேம்பாட்டையும் உறுதி செய்ய வெளிப்படைத்தன்மையுடன் செயல்பட வேண்டும் என்று அவர் அறிவுறுத்தினார்.

நிர்வாகத்தில் பல்வேறு துறைகளுக்கு இடையே ஒத்துழைப்பு அவசியம் என்று அவர் வலியுறுத்தினார்.

ஏழைகள் மற்றும் பின்தங்கிய மக்களின் நலனில் அதிக அக்கறை கொண்டு குடிமைப் பணி அதிகாரிகள் செயலாற்ற வேண்டும் என்று திரு. ஓம்பிர்லா கேட்டுக்கொண்டார்.

<<<<>>>>

நாட்டில் மின்கட்டமைப்புகளை குறிவைத்து நடத்தப்பட்ட இரண்டு லட்சம் சைபர் தாக்குதல்கள் முறியடிக்கப்பட்டுள்ளதாக மத்திய மின்துறை அமைச்சர் திரு. மனோகர்லால் கூறியுள்ளார்.

ஸ்ரீநகரில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், நாட்டின் இணையதள பாதுகாப்பு வழிமுறைகள் வலுவாக உள்ளது என்றார்.

ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையின்போது இந்தியாவுக்கு எதிரான சைபர் தாக்குதல்கள் நடத்தப்பட்டதாகவும், அவை அனைத்தும் வெற்றிகரமாக முறியடிக்கப்பட்டன் என்றும் கூறினார்.

மின்துறை உட்பட அனைத்து துறைகளிலும் இதுபோன்ற தாக்குதல்களை தடுக்கும் தொழில்நுட்பத் திறன் இந்தியாவிடம் உள்ளதாக திரு. மனோகர்லால் கூறினார்.

<<<<>>>>

காங்கோவில் ஏற்பட்ட படகு விபத்தில் 32 பேர் உயிரிழந்தனர்.

அந்நாட்டின் தும்பா ஆற்றுப் பகுதியில் 100 பயணிகளுடன் சென்ற படகு மோசமான வானிலை காரணமாக கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

பலரைக் காணவில்லை என்றும், அவர்களை தேடும் பணி தொடர்ந்து நடைபெறுவதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

மோசமான வானிலை மற்றும் உபகரணங்கள் பற்றாக்குறை காரணமாக மீட்புப் பணியில் தொய்வு ஏற்பட்டுள்ளதாக அவர்கள் கூறினர்.

<<<<>>>>

சாலை விபத்துகளை பெருமளவு குறைக்க வேண்டும் என்ற நோக்குடன் மத்திய அரசு செயலாற்றி வருவதாக மத்திய சாலைப் போக்குவரத்துத் துறை இணையமைச்சர் திரு. அஜய் தம்தா கூறியுள்ளார்.

புதுதில்லியில் சாலைப் பாதுகாப்பு தொடர்பான கருத்தரங்கில் பேசிய அவர், நாட்டில் ஒவ்வொரு ஆண்டும் சாலை விபத்துக்களால் சுமார் ஒன்றரை லட்சம் பேர் உயிரிழப்பதாகத் தெரிவித்தார்.

இதில் பெரும்பாலானோர் இளையோர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

விபத்துகளை தடுக்கும் நோக்கில் சாலைக் கட்டமைப்புகளும், வாகன வடிவமைப்பு தொடர்பான விதிமுறைகளும் மேம்படுத்தப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

சாலை விதிகளை பொதுமக்கள் முறையாக கடைபிடிக்க வேண்டும் என்றும் திரு. அஜய் தம்தா கேட்டுக்கொண்டார்.

<<<<>>>>

தமிழகத்தில் கோவை. நீலகிரி, தென்காசி மாவட்டங்களுக்கு உட்பட்ட சில பகுதிகளில் இன்று மிக கனமழைக்கு வாய்ப்பு உள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

திருநெல்வேலி, தேனி, கன்னியாகுமரி மாவட்டங்களின் சில பகுதிகளில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக அந்த மையம் தெரிவித்துள்ளது.

மாநிலத்தின் பிற பகுதிகளில் லேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே சென்னை, கள்ளக்குறிச்சி உள்ளிட்ட மாவட்டங்களில் நேற்று பரவலாக மழை பெய்தது.

தருமபுரி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் நேற்று கனமழை பெய்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

தென்னாப்பிரிக்காவில் கனமழையால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் 78 பேர் உயிரிழந்தனர்.

அந்நாட்டின் கிழக்குப் பகுதியில் ஏற்பட்டுள்ள வெள்ளப்பெருக்கால் போக்குவரத்து, தகவல் தொடர்பு மற்றும் மின்சார சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

மீட்புப் பணிகள் தொடர்ந்து நடைபெற்ற வருவதாக அந்நாட்டு அமைச்சர் திரு. வெலன் கோசி தெரிவித்தார்.

<<<<>>>>

சீனாவில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் சசிகுமார் முகுந்த் காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதி முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர், 6-3, 6-4 என்ற செட் கணக்கில் சீனாவின் **Yaojie Zeng**-ஐ வென்றார்.

<<<<>>>>

தாய்லாந்தில் நடைபெற்று வரும் பாரா பேட்மிட்டன் போட்டியில் இந்தியாவின் நித்யஸ்ரீ சுமதி சிவன், பாலக்கோலி மகளிர் ஒற்றையர் பிரிவிலும், சிவராஜன் சோலைமலை ஆடவர் ஒற்றையர் பிரிவிலும், ஜதின் ஆஸாத் - சிவம் யாதவ் இணை ஆடவர் இரட்டையர் பிரிவிலும் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

<<<<>>>>

**Skopje** சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Manav Thakkar – Manush Shah** இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

வடக்கு மேசிடோனியாவில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்த இணை, 11-6, 2-11, 11-4, 13-11 என்ற செட் கணக்கில் போர்ட்டோரிக்காவின் **Angel Naranjo – Oscar Birriel** இணையை வென்றது.

**<<<<The End>>>>**